## 3.2 1999–2000 – நமக்கு நாமே திட்ட செயலாக்கம் – நகர்ப்புறங்களிலும் செயல்படுத்துதல் – திருத்திய வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (ஒ.ஊவ.தி1) துறை

அரசாணை (நிலை) எண்.77 நாள் : 19.04.1999

படிக்க:

1. ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.112, நாள்.01.06.98
2. ஊரக வளர்ச்சித் துறை செயலரின் நேர்முகக் கடித எண்.13358/ ஒஊவதி 1/99, நாள்.01.04.99
3. செயலர் ஊரக வளர்ச்சித்துறை அவர்களால் 05.04.99 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பு
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.13723 /98/பொ.சு.1, நாள்.02.04.99

**ஆணை**

1997–98–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ''நமக்கு நாமே திட்டம்'' என்ற புதிய திட் டம் 1997–98 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து 1998–1999–ம் ஆண்டிலும் செயல்படுத்தப்பட்டது. பார்வை 1–ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் இத்திட்டத்தின் செயலாக்கத்திற்காக விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டது. இந்த வழிகாட்டி நெறிமுறைகளில் குறிப்பாக இத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள் கிராம அளவிலான வளர்ச்சித் திட்டங்களில் குறிப்பாக கிராம மக்களின் பங்கேற்பு இருக்க வேண்டும் என்றும் கிராம மக்கள், அரசு அதிகாரிகள் ஆகியோர் ஒருங்கிணைந்து சமுதாயத்தின் மேம்பாட்டிற்கான வளர்ச்சித் திட்டங்களில் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் ஆகியவற்றில் ஒரு குழுவாக பங்கேற்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது. ஜனநாயக அமைப்பில் மக்கள் சபை அடிப்படையான அமைப்பு ஆதலால், இத்தகைய பங்கேற்பு செயல்திட்டங்களை கிராம அளவிலான அமைப்புகளின் மூலமாக செயல்படுத்துவது அவசியமாகிறது. மக்கள் சபை கூட்டத்தில் அரசு திட்டங்கள் குறித்தும் இத்திட்டங்களுக்காக கிராம ஊராட்சிகளில் உள்ள நிதி ஆதாரங்கள் குறித்தும் அரசு அதிகாரிகளால் விளக்கமாக தெரிவிக்கப்பட வேண்டும். கிராம மக்களுக்கு அவர்களுடைய சமுதாயத்தின் தேவையைக் கருதி திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்துவதற்கு தேர்வு செய்யும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். கிராம மக்கள் பணமாக அளிப்பதற்கோ அல்லது உடல் உழைப்பை நல்குவதற்கோ அல்லது வேறு எந்த வகையிலோ அதாவது சமுதாய சொத்துக்களை பராமரிப்பது போன்ற நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு ஏதுவாக திட்டங்களை மக்கள் சபை கண்டறிய வேண்டும். மேலும், இந்த வழிகாட்டி நெறிமுறைகளில் (1) 25 % அல்லது அதற்கு மேல் பணமாக அளிப்பதற்கோ அல்லது உடல் உழைப்பை நல்குவதற்கோ அல்லது வேறு எந்த வகையிலோ மக்களிடமிருந்து பங்கேற்பை ஏற்றுக்கொள்வதற்கும் (2) மேலும், அமைப்புகள் அல்லது நிறுவனங்கள் தாமாகவே முன்வந்து நிதியுதவியை இத்திட்டத்திற்காக அளிக்கலாம் என்றும் இவ்வாறான பங்கேற்பிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தகுந்த பரிசுகள் அளிப்பதற்கு அரசிற்கு கருத்துருக்கள் அனுப்பலாம் என்றும் (3) மேலும், ஏரி, குளங்கள் போன்றவற்றில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்பொழுது ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும் என்றும் இத்தகைய நடவடிக்கைகள் வறட்சிக் காலங்களில் உதவுவதற்கு ஏதுவாக மழை நீரை சேகரிப்பதற்கு வழிவகுக்கும் என்றும் இவை வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் வகையில் செய்யப்பட வேண்டும் என்றும் (4) மேலும், அரசு நிலங்களில் பொதுமக்கள் பள்ளிக் கட்டிடங்கள் கட்டலாம் என்றும் ஆனால் இத்தகைய கட்டிடங்களுக்கான தகுதிச்சான்றிதழை பொதுப்பணித்துறையிடமிருந்து பெற வேண்டும் என்றும் வகை செய்யப்பட்டது.

2. 1999–2000–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டம் தொடரப்பட வேண்டியதின் முக்கியத்துவம் குறித்து கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

> ''17. இந்த அரசின் மற்றொரு புதிய திட்டமான நமக்கு நாமே திட்டத்தினை மக்கள் பெருமளவில் ஆதரவளித்து வருகின்றனர். இதன் கீழ் நடப்பு நிதி ஆண்டில் ரூ.24.19 கோடி மதிப்பில் கிராமத் தேவைகளுக்கென 4,200 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்கு முதற்கட்டமாக ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
>
> 18. மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்ள முன்வரும் மனப்பான்மையை வளர்த்திடும் ''நமக்கு நாமே திட்டம்'' வரும் நிதியாண்டிலிருந்து நகர்ப்புறங்களிலும் செயல்படுத்தப்படும்''

**3. NNT**

3. பார்வை 2–ல் குறிப்பிட்டுள்ள நேர்முகக் கடிதத்தில் 1999–2000–ம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென வழிகாட்டி நெறிமுறைகளை அனுப்புமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார். 1999–2000–ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நமக்கு நாமே திட்டம் நகர்ப்புறங்களிலும் செயல்படுத்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து இதனடிப்படையில் வழிகாட்டி நெறிமுறைகளை அமைப்பதற்கு ஏதுவாக செயலர், ஊரக வளர்ச்சித்துறை அவர்களால் 05.04.99 அன்று ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. பார்வை மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள இக்கூட்ட நடவடிக்கைக் குறிப்பில், ஊரக வளர்ச்சி இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர் ஆகியோர் 1999 –2000–ம் ஆண்டில் நமக்கு நாமே திட்ட வழிகாட்டி நெறிமுறைகளுக்காக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4.அரசு தற்பொழுதுள்ள வழிகாட்டி நெறிமுறைகளையும் முன்பத்தி 3–ல் குறிப்பிட்டுள்ள கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும், பெறப்பட்ட கருத்துருக்களையும் கவனமாக ஆராய்ந்து 1999–2000–ம் ஆண்டில் இத்திட்டம் மேலும், செம்மையாக செயல்படுத்துவதற்கு ஏதுவாக இந்த ஆணையின் இணைப்பு 1–ல் உள்ளவாறு வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிடுகிறது. 1998–1999–ம் ஆண்டிற்கு வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகள் தேவையான அளவிற்குத் திருத்தப்பட்டு, இந்த ஆணையின் இணைப்பு 1–ல் உள்ளவாறு 1999–2000–ம் ஆண்டிற்கான வழிகாட்டி நெறிமுறைகள் உடனடியாக நடைமுறைக்கு வருவதற்கு வெளியிடப்படுகிறது.

5. அரசு 1999 – 2000–ம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்டத்தில் ரூ.10.00 கோடியை (ரூபாய் பத்து கோடி மட்டும்) இத்திட்டத்திற்காக ஒதுக்கியுள்ளது. ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு இந்த ரூ.10.00 கோடி நிதியை இணைப்பு – II –ல் உள்ளவாறு நான்கு தவணைகளில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும், சென்னை மாநகராட்சி ஆணையருக்கும், நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநருக்கும் பிரித்து வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. முன்பத்தி 5–ல் குறிப்பிட்டுள்ளபடி ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> “2515–00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 800. ஏனைய செலவு ஒன்பதாம் ஐந்தாண்டு
> திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம் – ஜே.டபிள்யூ நமக்கு நாமே திட்டம் செயலாக்கம் –
> 09 உதவி மானியங்கள் (து.தொ.கு. எண்.2515 – 00 – 800 ஜே.டபிள்யூ 0907)”

7. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா. எண். 1316/FS/P/99, நாள்.19.04.99–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

## இணைப்பு – I

### 1999 –2000 ஆண்டில் நமக்கு நாமே திட்ட செயல்பாட்டிற்கான வழிகாட்டி நெறிமுறைகள் (அரசாணை (நிலை) எண்.77 ஊரக வளர்ச்சி (ஒ.ஊ.வதி–1) நாள். 19.04.1999

1997–98–ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ''நமக்கு நாமே திட்டம்'' என்ற புதிய திட்டத்தை கிராம மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் மக்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை விரைவுபடுத்தும் நோக்குடனும் கிராம மக்களே திட்டமிட்டு செயல்படுத்தி சுயவளர்ச்சியை நிலை நிறுத்தும் நோக்குடனும் அறிவித்தார்கள். நமக்கு நாமே திட்டத்தின் அடிப்படை நோக்கம் கிராம அளவில் வளர்ச்சியினை கிராம மக்கள் தங்கள் சுயமுயற்சியால் ஏற்படுத்தி, சுய சார்பு நிலையில் நிலை நிறுத்துவது ஆகும். மக்கள் தங்களது தேவைகளை தாங்களாகவே நிறைவேற்றிக்கொள்ள முன்வரும் மனப்பான்மையை ஊக்குவிக்க வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தங்களது தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் மக்கள் பங்கேற்று செயல்படுத்திட அவர்களுக்கு அரசு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கும். அதாவது குடிமராமத்து கொள்கையை மீண்டும் கொண்டுவருதல் எல்லா சமுதாய சொத்துக்களையும் உருவாக்கி பராமரித்தல் விரிவுபடுத்துதல் போன்றவை இதன் அடிப்படை நோக்கங்களாகும். அரசே ஒரு கிராமத்திற்கான தேவையான அனைத்து வகையிலான பணிகளையும் நிர்ணயித்து முடிவெடுக்காமல் உள்ளூர் மக்கள் அவர்களின் தேவைகளை அவர்களே அறிந்து இவற்றை செயல்படுத்துவதில் முன்னுரிமையை அவர்களே நிர்ணயித்து இவற்றின் துரித செயலாக்கத்திலும் அவர்களது பங்கேற்பை ஊக்கப்படுத்துவதில் அரசு தூண்டுகோலாக இயங்கும்.

1. நமக்கு நாமே திட்டத்தின் நோக்கம்

i) நமக்கு நாமே திட்டம் கிராமம் மற்றும் நகர்ப்பகுதிகளுக்கும் பொருந்தும். உள்ளூர் மக்கள் தங்கள் தேவைக்கேற்ப பணிகளை தேர்ந்தெடுத்து தங்கள் பங்கினை செலுத்தி தங்களை ஈடுபடுத்திக் கொண்டு செயல்படுவதே இதன் அடிப்படைக் கொள்கையாகும்.

ii) பொது மக்களின் தேவைகள் இடத்திற்கு இடம் மாறுபடும். எனவே, ஒரே மாதிரியான திட்டங்களை செயல்படுத்தவோ அல்லது தேவையான நடவடிக்கையினை தேர்வு செய்வதில் கடுமையான விதிமுறையோ விரும்பத்தக்கதல்ல. ஆனால், எடுத்துச் செய்யப்படும் திட்டங்கள் மக்களின் விருப்பம் மற்றும் தேர்வின் அடிப்படையில் இருக்க வேண்டும். புதிய சொத்துக்கள் உருவாக்குவதற்கோ அல்லது ஏற்கனவே ஏற்படுத்திய சொத்துகளை பராமரிப்பதற்கோ இத்திட்டத்தை பயன்படுத்தலாம்.

iii) நமக்கு நாமே திட்டத்தை மக்களிடையே பரப்புவதற்கு சிறப்பு நிதி அரசால் வழங்கப்படினும் இத்திட்டத்தின் அடிப்படைக் கொள்கை மற்ற துறைகளில் மக்களின் நன்மைக்காக செயல்படுத்தும் திட்டங்களுக்கு குறிப்பாக சமுதாய சொத்துக்களை உருவாக்கும் திட்டங்களுக்கு உதாரணமாக ஊரக வளர்ச்சித் துறையில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களான ஒருங்கிணைந்த ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டம், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், மத்திய அரசு சுகாதார திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம் போன்ற திட்டங்களிலும் பின்பற்றலாம். நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஆதாரங்களை ஒன்று திரட்ட ஊக்குவித்து மக்களின் பங்கையும் இணைத்து செயல்படுத்தினால் அரசு ஒதுக்கீட்டில் அதிக பயன் பெற முடியும். எனினும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட திட்டங்களிலிருந்து நிதி நமக்கு நாமே திட்டத்திற்காக ஒருங்கிணைக்கப்பட்டு சமுதாய மேம்பாட்டிற்காக ஒரு குறிப்பிட்ட வேலையோ அல்லது நடவடிக்கையோ செயல்படுத்தப்படுமானால் கணக்கு வைப்பதிலும் பணம் பட்டுவாடா செய்வதிலும் குழப்பம் ஏற்படாதிருக்க இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டு செயல்படுத்தப்படும் பணியை ஒரு பணியாகவே ஒரு குறிப்பிட்ட திட்டத்துடன் கணக்கு, பணம் வழங்குதல் மற்றும் பயனீட்டுச் சான்றிதழ் வழங்குவதற்கு ஏதுவாக வகைப்படுத்தப்பட வேண்டும்.

iv) தேர்ந்தெடுக்கப்படும் பணி, நிதி தொடர்பான திட்டமாக இருக்க வேண்டுமென்பதில்லை. சுகாதாரம் மற்றும் துப்புரவு, நோய் தடுப்பு, கல்லாமை ஒழித்தல், இலவச மருத்துவ பரிசோதனை, கிராமத்தின் சுற்றுப்புற சூழல் பெருமளவில் மேம்படுத்துதல் முதலியவற்றிற்கான விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல் மற்றும் நலிந்த பிரிவினரின் சமுதாய வளர்ச்சிக்கு அதிகாரம் வழங்குதல் போன்ற நிதியில்லாத நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.

v) உள்ளாட்சி அமைப்புத் திட்டப்பணிகள், மட்டுமே எடுக்க வேண்டுமென வரையறுக்கப்பட வேண்டியதில்லை. எந்தத் துறை சம்பந்தப்பட்ட பணியாயினும் அதாவது வேளாண்மை,

பொதுப்பணித்துறை, மின்சாரம், ஆதிதிராவிடர் நலம், பிற்பட்டோர் நலம், நெடுஞ்சாலைகள், சுகாதாரம், விளையாட்டுகள், கால்நடை பராமரிப்பு முதலிய துறைகள் பணிகளையும் அத்துறையின் ஒப்புதலுடன் நமக்கு நாமே திட்டத்தில் எடுத்து மக்களின் பங்கேற்புடன் செயல்படுத்தலாம்.

vi) கீழ்க்கண்ட சில நடவடிக்கைகளை நமக்கு நாமே திட்டத்தில் மேற்கொள்வதற்கு எடுத்துக்காட்டுகளாக கூறலாம். இது ஒரு முழுமையான பட்டியல் அல்ல.

1) சமுதாயச் சொத்துக்களான பள்ளிக்கூடங்களுக்கான கட்டிடங்கள், பரிசோதனைக் கூடங்கள், கழிவறைகள் கட்டுதல், மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், நூலக அறைகள், விடுதிகள், சத்துணவு மையங்கள், தொலைக்காட்சி வைக்கும் அறைகள், பொது விநியோகக் கடைகள், கால்நடை பராமரிப்பிற்கான மருத்துவ மையங்கள் கட்டுதல், குடிநீர் வசதி உருவாக்குதல் மற்றும் கட்டிடங்களுக்கு வெள்ளையடித்தல் மற்றும் இத்தகைய சொத்துக்களை பராமரித்தல் போன்ற பல வேலைகளை கிராமம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் மக்கள் தேவைக்கேற்ப மேற்கொள்ளலாம்.

2. குளம், கால்வாய், குட்டை, ஊரணிகள் போன்ற சிறு பாசனங்கள் தூர்வாருதல், மதகுகள், தடுப்பு சுவர்கள், கால்வாய்கள் ஊரணிகள் முதலியன உருவாக்குதல் மற்றும் இவற்றை மேம்படுத்துதல் போன்ற வேலைகள் செய்தல்.

3. பாலம் , சிறுபாலம் கட்டுதல் மற்றும் புதிய சாலைகள் அமைத்தல், சாலைகள் மேம்படுத்துதல், ஜல்லி அல்லது தார்ச்சாலையாக்குவது மற்றும் புதுப்பித்தல் சாலைகளுக்கும் சந்துகளுக்கும் செங்கற்கள் அல்லது சிமிண்டினாலான பலகைகள் அமைத்தல்.

4. பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், போக்குவரத்து தீவுகள், நீரூற்று, தெருவிளக்குகள் முதலியன கீழ்க்கண்ட சில விதிமுறைகளுக்கு உட்பட்டு மேம்பாடு செய்தல் மற்றும் பராமரித்தல்.

அ) சொத்தை நிர்வகிக்கும் அலுவலரின் முன் அனுமதி இல்லாமல் நிரந்தர கட்டிடம் கட்டக்கூடாது.

ஆ) பணியை தொடங்கி நடத்தும் அமைப்பு சொத்தின் மீது எந்த உரிமையும் செலுத்த முடியாது.

இ) மதம் அல்லது இனம் தொடர்பான கட்டிடங்கள் இந்நிலத்தில் கட்டவோ அல்லது நிறுவவோ கூடாது.

ஈ) அரசியல் கட்சிகளின் சின்னங்கள் அல்லது கொடிகள் இந்த இடத்தில் வைக்கப்படக்கூடாது.

உ) நிலத்தின் தன்மை பாதிக்கப்படாதவாறு சொத்திற்கு சொந்தமோ அல்லது குத்தகை உரிமையோ கேட்காத நிலையிலும் விளம்பரம் அனுமதிக்கப்படலாம்.

ஊ) பணியைத் தொடங்கி நடத்துபவருக்கோ அல்லது அமைப்பிற்கோ மேம்படுத்துவதற்காகவும் பராமரிப்பதற்காகவும் வழங்கப்பட்ட அனுமதி மனமுவந்து ஏற்றுக்கொண்ட நிபந்தனைகள் மீறப்படும்பொழுதோ அல்லது அக்கறை காட்டாத நிலையிலோ இரத்து செய்யப்படலாம்.

## 2. நமக்கு நாமே திட்ட செயல்முறை

நமக்கு நாமே திட்ட செயல்முறை கிராமங்கள், நகர்ப்புற பகுதிகளைத் தேர்வு செய்தல், மற்றும் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் நிலை நிறுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

### 2.1 நமக்கு நாமே திட்டத்திற்காக குழுக்கள் அமைத்தல்.

நமக்கு நாமே திட்ட நடவடிக்கைகள் பல கிராமங்கள் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் ஒரே சமயத்தில் ஆரம்பித்து மக்களிடையே பரப்பப்பட வேண்டுமாதலால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகர உள்ளாட்சி அமைப்பிற்கும் ஒரு ஊக்குவிக்கும் சிறப்பு நமக்கு நாமே குழு அமைக்கலாம். இக்குழுக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட வருவாய் அலுவலர் / திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை / துணை மாவட்ட ஆட்சித்தலைவர் / உதவி திட்ட அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்/உதவி இயக்குநர், பேரூராட்சி மற்றும் ஆணையர், சென்னை மாநகராட்சி தலைமையில் செயல்படலாம். சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் / செயல் அலுவலர்/ மாநகராட்சி ஆணையர் இந்தக் குழுவை கூட்டுபவராகவும் ஒருங்கிணைந்து நடத்துபவராகவும் இருப்பார். இந்தக் குழுவில் குறைந்தது தாமாகவே முன்வரும் இரு அரசு அதிகாரிகளையும் மற்ற அரசு சாரா நிறுவனத்திலிருந்தோ அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனத்திலிருந்தோ உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம். தாமாகவே முன்வந்து பங்கேற்பதற்காக மக்களிடம் கருத்துக்களை எளிய முறையில் எடுத்துக் கூறும் திறமை உள்ளவர்கள் மற்றும் அவர்களை ஊக்கப்படுத்துகிறவர்களையே இக்குழுவில் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

## 2.2 நமக்கு நாமே திட்டத்தின் கீழ் வேலைகள் மற்றும் நடவடிக்கைகளை தேர்வு செய்தல்

எந்த ஒரு குடிமகனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஒரு வேலையை தேர்வு செய்வதற்கு முன்மொழியலாம். வேலைகளை பரிந்துரைப்பதற்கு அதிக அளவில் நபர்கள் முன்வரவில்லை என்றாலும் நமக்கு நாமே குழுவின் உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், பொதுமக்கள் இத்தகைய தன்னார்வ பணிகளுக்காக ஊக்கப்படுத்த வேண்டும். நமக்கு நாமே திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பணிகள் பல இடங்களில் ஒரே நேரத்தில் தேர்ந்தெடுக்கப்படும். ஆதலால் ஒரு வட்டாரத்தில் குறைந்தது 6 கிராமங்கள் மற்றும் 6 சுழற்சிகள் (பத்தி எண் .3) என்ற அடிப்படையில் ஒவ்வொரு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் ஒரு ஆண்டிற்கு செயல்படுத்தப்படுவது கடினமாக இருக்காது. எனினும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அதிக வேலைகள் / நடவடிக்கைகள் செயல்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

நமக்கு நாமே திட்ட ஊக்குவிக்கும் குழு உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், பொதுமக்களின் பிரதிநிதிகள் இத்திட்டம் செயல்படுத்தப்படப்போகும் இடங்களுக்கு சென்று ஊர் மக்களுடன் பேச்சுவார்த்தை துவக்க வேண்டும். அவர்களிடம் நமக்கு நாமே திட்டத்தின் கொள்கைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து உள்ளூர் ஆதாரங்களை ஒருங்கிணைப்பதால் பெறும் பயனைப் பற்றியும் எடுத்துரைக்க வேண்டும். மக்களின் பங்கேற்பு முறையின் மூலம் உள்ளூரிலேயே திட்டமிடுதல், செயல்படுத்துதல், பராமரிப்பு மற்றும் நிலைநிறுத்துதல் நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் அவர்களுக்கு விளக்க வேண்டும்.

## 2.3 திட்டமிடுதல்

திட்டமிடுதலில் ஊக்கப்படுத்துதல், உள்ளூர் மக்களின் தேவைக்கேற்ப முன்னுரிமையளித்தல், பணிகள் தொடர்பான பட்டியல் தயார் செய்தல், செயல் திட்ட மதிப்பீடு தயாரித்தல் முதலியவை அடங்கும்.

உள்ளாட்சி அமைப்பு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டிய வேலை அல்லது நடவடிக்கை குறித்து தேர்வு செய்தவுடன் முதல் நடவடிக்கையாக சிறப்பு குழு ஊராட்சித் தலைவர் கிராம சபா கூட்டத்தினை முடிந்தவரை மாலை 4.00 மணிக்கு மேல் கூட்ட உதவி செய்ய வேண்டும். இதே போன்று நகர உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரை வார்டு கூட்டங்களும் சம்பந்தப்பட்ட வார்டில் நடத்தப்பட வேண்டும். கிராம ஊராட்சித் தலைவரோ அல்லது நகர உள்ளாட்சி அமைப்பின் தலைவரோ இக்கூட்டத்தினை நடத்துவதில் முக்கிய பங்கு ஏற்க வேண்டும். இதர தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சட்டமன்ற உறுப்பினர் உள்பட இக்கூட்டத்தின் நடவடிக்கைகளில் தீவிர பங்கு கொள்ள ஊக்குவிக்கப்பட வேண்டும். இருப்பினும் அலுவலர்கள் இணைப்பு பாலமாகவே செயல்படுவர்.

கிராம ஊராட்சித் தலைவரோ அல்லது உள்ளாட்சி அமைப்பின் தலைவரோ மக்களிடமிருந்து பெறப்பட்ட நமக்கு நாமே திட்ட கருத்துருக்களை கலந்து ஆராய்ந்து திட்டங்களை அதன் முக்கியத்துவம் அறிந்து முன்னுரிமை அளித்து செயல்திட்டம் தயாரிக்க வேண்டும். நடத்திக் கொண்டிருக்கும் திட்டங்களுடன் நமக்கு நாமே திட்டத்தை ஒருமுகப்படுத்தி மக்கள் செயல்பட ஊக்குவிக்கப்பட வேண்டும். பொது மக்களின் பங்கேற்பு மற்றும் பங்களிப்பு ஆகியவற்றின் தன்மையை கருத்திற்கொண்டு ஊக்குவிக்கும் குழு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிற்கு தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் முன்னுரிமைப்படுத்த உதவ வேண்டும்.

உள்ளாட்சி அமைப்பு கூட்டத்தில் (கிராம சபா / வார்டு கூட்டம்) திட்டப் பணிகள் பட்டியல், பொதுமக்களின் நன்கொடை, செயல்படுத்தும் நேரம், செயல்படுத்த நிதி, செயல்படுத்தும் முகமைகள் முதலியன இறுதியாக்கப்பட்டு பட்டியல் தயார் செய்ய வேண்டும். இவ்வாறு இறுதியான பட்டியல் தயார் செய்யப்பட்ட பின் நமக்கு நாமே திட்டக்குழு, பங்குத்தொகை பெறுதல், மதிப்பீடுகள் தயார் செய்தல், தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஒப்பளிப்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பெறுதல் ஆகிய பணிகளுக்கு தொடர்ந்து ஏற்பாடு செய்ய வேண்டும்.

## 2.4 செயலாக்கம்

செயலாக்க நிலையில் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி அளித்தல் பணிகள் தொடங்குதல் மற்றும் முடிவாக்குதல், பணம் பட்டுவாடா செய்தல் முதலியன அடங்கும்.

பணிகளை ஒருங்கிணைத்து சரியான முறையில் செயல்படுத்தி உள்ளாட்சி அமைப்புகளே பொறுப்பான நபர்களைக் கொண்டு ஒரு செயற்குழு அமைக்கலாம். இந்த செயற்குழுவிற்கு கிராம ஊராட்சி அல்லது நகர உள்ளாட்சி அமைப்பின் தலைவரோ அல்லது உள்ளூரிலேயே உள்ள ஒரு பொறுப்பான நபரோ தலைவராக இருக்கலாம். இந்த நிர்வாகக் குழுவிற்கு கிராம ஊராட்சியின் தலைவரோ அல்லது நகர உள்ளாட்சி அமைப்பின் தலைவரோ அல்லது உள்ளூரைச் சேர்ந்த முக்கியமான நபரோ தலைவராக இருக்கலாம்.

## 3. NNT

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளுக்கான நிர்வாக மற்றும் தொழில் நுட்ப ஒப்பளிப்பு அளிக்கப்படுவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் முன் வைக்கப்பட்டு அதன் ஒப்புதலைப் பெற்ற பின்னரே இது மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்டத்திற்குள்ளேயே அனைத்து நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஒப்பளிப்பை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஒப்பளிப்பு வழங்கப்பட்டுவிட்ட பிறகு காலதாமதத்தை தவிர்த்து 7 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட துறையின் தொழில்நுட்ப பிரிவு வேலைகள் உடனடியாக துவக்கப்படுவதற்கான இடங்களை குறிப்பிட வேண்டும். தொழில்நுட்ப பிரிவின் வேலையின் செயல்பாட்டில் கண்காணித்தல் மற்றும் அளவெடுத்தல் ஆகியவற்றை தேவையானபொழுது மேற்கொள்ள வேண்டும். வேலை முடிக்கப்பட்ட பிறகு இறுதியாக அளவு சரிபார்க்கப்பட்டு இறுதியாக பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டும். வேலை முடிக்கப்பட்டதற்கான இறுதி அறிக்கையை தொழில்நுட்பப் பிரிவு தயாரிக்க வேண்டும்.

கிராம ஊராட்சி அல்லது வார்டு கூட்டத்தில் வேலையின் செயலாக்கத்தின் போதும், மற்றும் வேலை முடிந்தபிறகும் மீண்டும் வேலையின் தன்மை மற்றும் அதன் நன்மை பற்றி பொதுமக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

### 2.5 நிலை நிறுத்துதல்

பணி முடிவு பெறுதல், பராமரிப்பதற்கான ஏற்பாடு மற்றும் நமக்கு நாமே திட்ட கொள்கைகளின்படி மக்களின் தேவைகளை அறிந்து முன்னுரிமை அளித்தல் ஆகியவை நிலை நிறுத்தலில் அடங்கும்.

உள்ளூர் மக்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் உதவியுடன் இந்த உருவாக்கப்பட்ட சொத்துகளை தொடர்ந்து பராமரிப்பதற்காக அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும். உள்ளூர் மக்கள், உள்ளூர் வேலைகளை திட்டமிடுதல், செயலாக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் அதிக அளவில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கலாம். பணிகள் முடிந்தபின் கிராம ஊராட்சி அல்லது வார்டு கூட்டம் நிலைமையை பரிசீலிப்பதற்காகவும் எதிர்காலத்தில் திட்டமிடுவதற்காகவும் கூட்டப்பட வேண்டும்.

### 3. செயலாக்கத்தில் சுழற்சி முறை

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வேலையினையும் திட்டமிட்டு உறுதியாக்கி நிறைவேற்ற குறைந்தது இரண்டு மாதங்களிலிருந்து ஆறு மாதங்கள் தேவைப்படுகிறது. ஒரே நேரத்தில் ஒரு உள்ளாட்சி அமைப்பு பல்வேறு பணிகளை தொடங்கலாம். திட்டமிடும் நடவடிக்கை தவிர செயலாக்கம் மற்றும் இந்த நடவடிக்கைகளை நிலை நிறுத்துதல் ஆகியவை ஒரே நேரத்தில் ஒரு உள்ளாட்சி அமைப்பில் நிகழலாம். வேறு வகையாக கூறினால் செயலாக்கம் மற்றும் நிலை நிறுத்தல் பல பகுதிகளில் ஒரே நேரத்தில் வெவ்வேறு நிலைகளில் நிகழலாம். எனவே, உள்ளாட்சி அமைப்புகளே நடவடிக்கைகளுக்காக ஒரு வருடத்தில், குறைந்தது 6 சுழற்சி முறையை பின்பற்றலாம். இதன்படி நமக்கு நாமே திட்டத்தின் கீழ் குறைந்தது 6 வேலைகள்/ நடவடிக்கைகள் ஒரு வருடத்தில் ஒரு வட்டாரத்தில் அல்லது ஒரு நகர உள்ளாட்சி அமைப்பில் தொடங்கப்பட வேண்டும்.

### 4. நிதி

நமக்கு நாமே திட்டத்திற்காக 1999–2000–ம் ஆண்டிற்காக முதற்கட்டமாக அரசு ரூ.10.00 கோடியை ஒதுக்கியுள்ளது. இந்த ரூ.10.00 கோடியை நான்கு காலாண்டு தவணைகளில் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்னை மாநகராட்சிக்கும், நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநருக்கும் இணைப்பு – II–ல் உள்ளவாறு உடனடியாக விடுவிக்கப்படுகிறது. நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சிறப்பு மானியம் கோரி அரசிற்கு கருத்துருக்கள் அனுப்பலாம். இவ்வாறு அனுப்பப்படும் கருத்துருக்கள் நமக்கு நாமே திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் மாவட்டம் என்ற அடிப்படையிலோ அல்லது உள்ளூர் மக்களின் முக்கியமான தேவைகளில் ஒன்றாக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டு மாவட்டங்களுக்கு கூடுதல் நிதி விடுவிக்கப்படும்.

ii) இத்திட்டத்திற்கென தனியாக சேமிப்பு வங்கி கணக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களது பெயரில் நமக்கு நாமே திட்டக் கணக்கு ஒன்று தொடங்கப்பட வேண்டும். இது போன்றே திட்டத்தை செயல்படுத்தும் நிலையில், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் /விரிவாக்க அலுவலர் (பேரூராட்சி) / நகராட்சி ஆணையர் / கிராம ஊராட்சியின் செயல்படுத்தும் திட்டங்களுக்கான நிதிக் கணக்கு / செயல்படுத்தும் துறை அலுவலர் ஆகியோரின் பெயரால் கணக்குகள் துவக்கப்பட வேண்டும்.

iii) அரசு இத்திட்டங்களுக்கான நிதியை ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவரும், தன் வைப்பு நிதிக் கணக்கில் வைக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. எனவே, மாவட்டத்திற்கு மானியமாக விடுவிக்கப்படும் நிதி இந்த தன்வைப்பு நிதிக் கணக்கில் வைக்கப்பட்டு சிறுசேமிப்பு வங்கி கணக்கில் உள்ள இந்த பங்குத் தொகையுடன் சேர்த்து செயலாக்க முகமைகளுக்கு விடுவிக்கப்படும்.

iv) நிர்வாக ஒப்பளிப்பிற்குப் பின் மாவட்ட ஆட்சித் தலைவர் செயலாக்க முகமைகளுக்கு நிதியை விடுவிக்க வேண்டும். இந்த சிறப்பு மானியம், மத்திய அரசுடன் இணைந்து மாநில அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கான நிதியுடனோ அல்லது மற்ற திட்டங்களிலிருந்து நமக்கு நாமே திட்டத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரங்களுடனோ தொடர்புபடுத்தக் கூடாது. இப்பத்தியில் அதாவது, 4(ii) –ல் குறிப்பிட்டுள்ள நமக்கு நாமே திட்ட நிதியிலிருந்து பெறப்படும் வட்டியை தகவல், கல்வி மற்றும் தகவல் அளிப்பு, ஆவணத் தயாரிப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்காக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

v) மேற்குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு அன்றி நமக்கு நாமே திட்டத்தை மக்களிடையே பரப்புவதற்கும் உள்ளூர் ஆதாரங்களை முழு அளவில் பயன்படுத்துவதற்கும் மாவட்ட ஆட்சித்தலைவர்களும் சென்னை மாநகராட்சி ஆணையரும் அந்த பகுதியில் செயல்படுத்தப்படும் மத்திய திட்டங்களுடனும் மற்ற வளர்ச்சி திட்டங்களுடனும் இணைந்து செயல்படுத்தக்கூடிய எல்லா சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

vi) பொதுமக்களின் பங்கேற்பு நிதியாகவோ அல்லது உடல் உழைப்பாகவோ அல்லது வேறு வகையிலோ 25% – க்கு மேல் இருக்குமாறு அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

vii) உள்ளாட்சி அமைப்புகள் இத்திட்டத்திற்காக அவைகளின் நிதியிலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ நிதி வழங்கலாம்.

viii) வெளிநாடுகளில், குடியுரிமை பெறாமல் வாழும் இந்தியர்களும் நமக்கு நாமே திட்டத்திற்காக உதவி வழங்கலாம். இவ்வாறு வழங்கப்படுவது நிதியாகவோ அல்லது பொருளாகவோ இருக்க வேண்டும். இவ்வாறு இத்திட்டத்திற்காக நிதி வழங்க விருப்பம் உள்ள வெளிநாடுகளில் குடியுரிமை பெறாமல் வாழும் இந்தியர்கள், நிதி வழங்க முன்வரும்போது, வேலை அல்லது நடவடிக்கை, செயல்படுத்தப்பட வேண்டிய / செயல்படுத்தப்படும் இடம் ஆகிய விவரங்களை தங்களுடைய விருப்பக் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டு எழுத்து மூலமாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவருக்கு / ஆணையர், சென்னை மாநகராட்சிக்கு தெரிவிக்க வேண்டும். இவ்வாறாக கடிதம் பெறப்பட்ட பின் சம்பந்தப்பட்ட அதிகாரி இந்தக் கோரிக்கையின் எல்லாத் தன்மைகளையும் பரிசீலித்தபின் நமக்கு நாமே திட்டத்திற்காக இந்த பங்கேற்பை ஏற்பதற்கு தயாராக உள்ளதாகத் தெரிவிக்க வேண்டும்.

### 5. பொது மக்கள் பங்கேற்பு

பொதுமக்கள் பங்கேற்பு பணமாகவோ, உடல் உழைப்பாகவோ அல்லது பொருட்களாகவோ இருக்கலாம். இது குறித்து வழிமுறைகள் பின்வருமாறு தெளிவாக்கப்படுகிறது.

### 5.1 பங்கேற்பு – பணமாக வழங்குதல்

பணமாக பெறப்படும் அனைத்து பங்குத் தொகையையும் மாவட்ட ஆட்சித் தலைவர் / சென்னை, மாநகராட்சி ஆணையர் அவர்களால் மாவட்ட ஆட்சித் தலைவர் / சென்னை மாநகராட்சி ஆணையர் “நமக்கு நாமே திட்டக் கணக்கு” என்று எழுதப்பட்ட காசோலையாகவோ அல்லது கேட்பு வரைவாகவோ மட்டுமே பெறப்பட்டு, இது நமக்கு நாமே திட்டக் கணக்கு தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும். இவ்வாறு பெறப்படும் அனைத்து பங்குத் தொகைக்கும் ஒப்புதல் இரசீது கொடுக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் / ஆணையர், சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் இதற்கென தனியாக ஒரு பதிவேடு திறந்து பணமாகப் பெற்ற பங்குத் தொகை கணக்கினை பராமரிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் சார்பாக ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலரும், சென்னை மாநகராட்சி ஆணையர் சார்பாக துணை ஆணையாளர் (நிதி) சென்னை மாநகராட்சியும் இந்த கணக்கு மற்றும் பதிவேடுகளை பராமரிக்க வேண்டும். வேறு எந்த நபரோ அல்லது நிறுவனமோ இத்திட்டத்திற்காக பணம் பெறுவது அனுமதிக்கப்பட மாட்டாது. நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஒப்பளிப்பிற்குப் பின் நமக்கு நாமே திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் திட்டங்களுக்காக மக்களிடமிருந்து உதவித் தொகையாக பெறப்படும் நிதியையும் நமக்கு நாமே திட்டக்கணக்கில் வரவு வைத்து, பிறகு இந்த நிதியை சம்பந்தப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்களின் நிதிக்காக உள்ளாட்சி அமைப்புகளினாலோ அல்லது செயல்படுத்தும் துறைகளினாலோ பராமரிக்கப்படும் கணக்கில் பற்று வைப்பதற்காக விடுவிக்கலாம். வெளிநாடுகளில்

குடியுரிமை பெறாமல் வாழும் இந்தியர்கள் அளிக்கும் நிதிக்கும் பத்தி 4 (vii) –ல் உள்ள வழிகாட்டி நெறிமுறைகள் பொருந்தும்.

### 5.2 பங்கேற்பு – பொருளாக அளித்தல்

செங்கல், மணல், கதவு சன்னல் மற்றும் உபகரணங்கள் போன்ற பொருட்களை வழங்கியும் பொதுமக்கள் இத்திட்டத்தில் பங்கேற்கலாம். இவ்வாறாக பெறப்படும் பொருட்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடமோ / செயல்படுத்தும் துறைகளிடமோ இந்த வேலைகளுக்கு நிர்வாக ஒப்புதல் அளிப்பதற்கு முன் ஒப்படைக்கப்பட வேண்டும். இதற்கென தனியாக இருப்புப் பதிவேடு ஒன்று திறக்கப்பட்டு வரவு செலவு தனியாக கண்காணிக்கப்படும். வழங்கப்பட்ட பொருட்களின் மதிப்பீடு, வேலை, சம்பந்தப்பட்ட பொறியியல் துறையினரால் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலை வீதப்பட்டியலுக்கு ஒப்ப மதிப்பீடு செய்யப்படும். பொது / தனியார் நிறுவனங்களால் வேலைகள் செயல்படுத்தப்படும்பொழுது ஒன்றுக்கு மேற்பட்ட ஆதாரத்திலிருந்து பெறப்பட்ட பொருட்கள் ஒன்று சேர்க்கப்பட்டு வேலையை செயல்படுத்தும் முகமைகளிடம், உள்ளூர் அதிகாரிகளால் / செயல்படுத்தும் துறைகளால் அளிக்கப்படும்.

### 5.3 பங்கேற்பு – உடல் உழைப்பாக அளித்தல்

உடல் உழைப்பை பணம் அளித்தலின்றி ஏற்றுக்கொள்வது அனுமதிக்கப்பட்டாலும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் தொழிலாளர்கள் எந்த காரணத்திற்காகவும் எந்த வகையிலும் பாதிக்கப்பட்டு சுரண்டப்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய உடல் உழைப்பை அந்த தொழிலாளர்கள் மனமுவந்து பங்கேற்கும் நிலையிலேயே ஏற்கப்பட வேண்டும். மனமுவந்து தொழிலாளர்கள் அளிக்கும் உடல் உழைப்பு, அரசுத் துறைகள் பின்பற்றும் ஒப்பளிக்கப்பட்ட விலை வீதப்பட்டியலின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இத்தகைய நிகழ்வுகளில் நிர்வாக ஒப்பளிப்பு, மதிப்பீட்டு செலவின் அடிப்படையில் செய்யப்பட்டாலும், மதிப்பீட்டு செலவிலிருந்து, தொழிலாளர்களால் மனமுவந்து அளிக்கும் உடல் உழைப்பிற்காக அவர்களுக்கு அளிக்க வேண்டிய ஊதியத்திற்காக ஆகும் செலவு / நன்கொடையாளர் அளிக்கும் நிதி ஆகியவற்றைக் கழித்து பணம் வழங்கப்பட வேண்டும். ஆனால் தூர்வாருதல், புதிய இணைப்புச் சாலைகளுக்கான வேலைகள் போன்ற கடின உடல் உழைப்பு கொண்ட வேலைகளுக்காக எச்சரிக்கையுடன் செலவு அதிகமாக மதிப்பிடாமலிருக்க கவனம் செலுத்தப்பட வேண்டும்.

### 6. பணி செயல்படுத்தும் முறை

6.1 இத்திட்டத்தின் கீழ் மக்களின் ஒத்துழைப்போடு பணிகளை நிறைவேற்ற தனிநபர்கள் அரசு சார்பற்ற நிறுவனங்கள், நன்கொடை வழங்குபவர்கள், தனி அல்லது பொது நிறுவனங்கள், கம்பெனிகள், வியாபார சங்கங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்கள், குடியிருப்போர் சங்கங்கள், அறக்கட்டளைகள், ரோட்டரி சங்கம் மற்றும் அரிமா சங்கங்கள் ஈடுபடுத்திக் கொள்ளலாம். இவர்கள் சொத்துக்களை உருவாக்கவும் பராமரிக்கவும் உதவி செய்யலாம்.

6.2 மேற்படி வேலைகளை செய்வதற்கு உள்ளாட்சி அமைப்புகள் / செயல்படுத்தும் அரசு துறைகள் / தனியார் நிறுவனங்கள் நன்கொடை வழங்குபவர்கள் அல்லது முன்பத்தி 6/1–ல் குறிப்பிடப்பட்டிருக்கும் எந்த அமைப்பிற்கோ வேலை செய்வதற்கான உத்திரவை வழங்கலாம். இந்த வேலைகளை தனியார் நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது பொதுமக்கள் செய்வதனாலும் இதற்கான பணம் மேற்படி வேலையை கண்காணிக்க பொறுப்பாக்கப்பட்டிருக்கும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பினாலோ அல்லது அரசுத் துறை அலுவலர் மூலமோ வழங்கப்படும். இம்மாதிரி வேலைகளில் அளவு சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப பிரிவினரால் சரிபார்க்கப்பட்டு அதற்குப் பின் மற்ற அரசு திட்டங்களில் உள்ளதுபோல் பணம் பட்டுவாடா அனுமதிக்கப்படும். பள்ளிக்கூடக் கட்டிடங்களைப் பொறுத்தவரை அதாவது உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி வேலைகளில் பொதுப்பணித்துறையினர் வேலைகளை மேற்பார்வையிடுவதோடு கட்டிட அமைப்பிற்கான உறுதிச் சான்றிதழும் வழங்கவேண்டும். பொதுப்பணித்துறை அல்லது நகராட்சிகள் அல்லது மாநகராட்சிகள் இத்தகைய உறுதிச் சான்றிதழை வழங்கலாம்.

6.3 பங்களிப்பை முழுமையாக 100 % பொதுமக்கள் அளிக்க முன்வரும்போது இந்த வேலையினால் பயன்பெறும் சங்கத்தினர் / நன்கொடையாளர் போன்றவர் அவர்களாகவே இந்த வேலையை செயலாக்க விருப்பம் தெரிவித்தால் நமக்கு நாமே திட்டக் கணக்கில் முன்னதாக முன்பணம் செலுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தாமல் அவர்களிடம் வேலைகளை ஒப்படைக்கலாம். ஆனாலும் வேலைகள் அரசால் நிர்ணயித்த வடிவமைப்புகள் மற்றும் கட்டிட உறுதிக்கான நிபந்தனைகள் மற்றும் மேலளவுகளுக்கு உட்பட்டு செயல்படுத்த வேண்டும்.

**6.4** நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எந்தவொரு அரசுத் துறையைச் சார்ந்த பணிகளையும் எடுத்துச் செய்யலாம். பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரை இந்த வேலைகளைச் செய்வதற்கான ஆட்சேபணை இல்லா சான்றை சம்பந்தப்பட்ட துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்கள் வழங்கலாம். இவ்வாறு சான்றிதழ் வழங்குவதில் தேவையற்ற அல்லது வேண்டுமேன்றே சம்பந்தப்பட்ட துறை காலதாமதம் ஏற்படுத்துவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் கருதினால் அதை உறுதி செய்து கொண்டு அவரே பொதுநன்மை கருதி ஆட்சேபணை இல்லா சான்று வழங்கலாம். இவ்வாறு வழங்கப்பட்ட இனங்களுக்கு மாவட்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவினரின் பின்னேற்பு பெற வேண்டும்.

**6.5** வேலைகளுக்கான மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்ட வேலை வீதப் பட்டியல் மற்றும் அங்கீகரிக்கப்படாத வேலைகளுக்கு நடைமுறையிலுள்ள விலை வீதப்பட்டியலின் அடிப்படையிலும் செய்யப்பட வேண்டும். வேலைகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தொழில்நுட்ப அதிகாரிகளால் / சம்பந்தப்பட்ட துறைகளின் தொழில்நுட்ப அதிகாரிகளால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். தனி நபர்களின் மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. முன்பணம் வழங்கப்படமாட்டாது. முழுத் தொகையோ அல்லது ஒரு பகுதியோ சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அதிகாரிகள் அளவெடுத்து சான்றிதழ் வழங்கிய பின்னரே வழங்க வேண்டும். எந்த நிலையிலும் வேலைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு அதிகமாக பணம் வழங்கக்கூடாது.

**6.6** தொழில்நுட்ப ஒப்பளிப்பிற்கான அதிகாரம் மற்ற அரசு திட்டங்களில் தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளதைப் போலவே ஆகும். மற்ற அரசுத் திட்டங்களில் உள்ளதைப் போலவே மாவட்ட ஆட்சித்தலைவரின் ஒப்புதல் பெற்ற பிறகு சம்பந்தப்பட்ட அதிகாரி நிர்வாக ஒப்பளிப்பு வழங்கலாம். ஊரக உள்ளாட்சி அமைப்புப் பணிகளைப் பொறுத்தவரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்வாக ஒப்பளிப்பையும் ஊரக வளர்ச்சித் துறையின் தொழில்நுட்ப பிரிவு தொழில்நுட்ப ஒப்பளிப்பையும் வழங்கும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு (சென்னை மாநகராட்சியைத் தவிர) சம்பந்தப்பட்ட துறைகள், தொழில்நுட்ப ஒப்பளிப்பையும், நிர்வாக ஒப்பளிப்பையும் மாவட்ட ஆட்சித்தலைவரின் ஒப்புதல் பெற்ற பின் வழங்கும். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை நிர்வாக ஒப்பளிப்பு ஆணையராலும், தொழில்நுட்ப ஒப்பளிப்பு சம்பந்தப்பட்ட மாநகராட்சியின் தொழில்நுட்ப அதிகாரியாலும் வழங்கப்படும்.

**6.7** வேலைகளுக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி முழு மதிப்பீட்டு தொகைக்கு வழங்கலாம். ஆனால் உடல் உழைப்பாக பங்களிப்பு பெறப்பட்டிருந்தால் பணம் பட்டுவாடா 75% மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டு, பொருளாகவும் பங்கேற்பு இருக்கும் நிலையில் இந்த பொருட்களின் விலையைக் கணக்கில் கொண்டு, பொருட்களுக்கான மதிப்பீட்டில் சரி செய்யப்பட வேண்டும். மக்களின் பங்கேற்பு பணமாக இருந்தால், இது முன்பாகவே பெறப்படுவதால், 100% பணம் பட்டுவாடாவிற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

**6.8** இத்திட்டத்தின் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு பணியும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் அல்லது அரசுத் துறை செய்வதானாலும் எல்லா வேலையும் சம்பந்தப்பட்ட துறையின் தொழில்நுட்ப பிரிவின் வழி முறைப்படியும் மற்றும் அதன் கண்காணிப்பிலும் தான் கண்டிப்பாக செய்ய வேண்டும். இந்த வேலைகளில் ஏற்படும் தரக்குறைபாடுகள் மற்றும் இதர குறைபாடுகளுக்கு வேலையை மேற்பார்வையிடும் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப பிரிவே முழு பொறுப்பு ஏற்கவேண்டும்.

## 7. பணி முன்னேற்றத்தை கண்காணித்தலும் மதிப்பிடுதலும்

i) கிராம சபா மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு கூட்டம் பின்வரும் மூன்று கட்டங்களில் கூட்டப்பட வேண்டும். அதாவது (1) திட்டமிடும் நிலை (2) செயல்படுத்தும் நிலை (3) வேலை முடிவுற்ற நிலை. ஊக்குவிக்கும் குழு ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட தேதியில் (இரு மாதங்களுக்கு ஒரு சுழற்சி என்பதின் அடிப்படையில் 6 கூட்டங்கள்) கூட்ட வேண்டும். நமக்கு நாமே ஊக்குவிக்கும் குழுவினரால் வேலையின் முன்னேற்றம் மற்றும் பிரச்சினைகள் பற்றி சுருக்கமாக கூட்டக் குறிப்புகள் பதிவு செய்யப்பட வேண்டும்.

ii) பின்வரும் அலுவலர்களைக் கொண்டு மாவட்ட அளவிலான அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அனைத்து மாவட்டங்களிலும் சென்னையைத் தவிர அமைக்கப்படும்.

## 3. NNT

| | |
|---|---|
| 1. மாவட்ட ஆட்சித்தலைவர் | பெருந்தலைவர் |
| 2. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | உறுப்பினர் / செயலர் |
| 3. அனைத்து சட்டமன்ற ‘உறுப்பினர்கள் | உறுப்பினர்கள் |
| 4. அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் | உறுப்பினர்கள் |
| 5. கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளில் மேயர்கள் அந்தந்த மாவட்டங்களுக்காக | உறுப்பினர்கள் |
| 6. மாவட்டங்களில் பணிகளை செயல்படுத்தும் துறைகளின் தலைமை அலுவலர்கள் | உறுப்பினர்கள் |
| 7. தலைவர், மாவட்ட ஊராட்சி | உறுப்பினர்கள் |
| 8. உதவி இயக்குநர் , பேரூராட்சி | உறுப்பினர்கள் |
| 9. நமக்கு நாமே திட்டம் செயல்படுத்தும் நகராட்சி பெருந்தலைவர்கள் | உறுப்பினர்கள் |
| 10. நமக்கு நாமே திட்டம் செயல்படுத்தும் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் ஆணையாளர்கள் | உறுப்பினர்கள் |
| 11. ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள் | உறுப்பினர்கள் |
| 12. நமக்கு நாமே திட்டத்தில் பங்கேற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சார்பற்ற நிறுவனங்கள் | உறுப்பினர்கள் |

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை மேயர் தவைராகவும், ஆணையர் இந்தக் குழுவின் உறுப்பினர் செயலராகவும் இருப்பார், வரிசை எண்கள் 5 முதல் 11–ல் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களில், சென்னை மாநகராட்சியின் மேயர் 7 உறுப்பினர்களில் ஒரு சம்பந்தப்பட்ட வார்டு உறுப்பினரையும் சேர்த்து நியமனம் செய்யலாம்.

இந்தக்குழு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூட்டம் நடத்தி வேலைகளின் முன்னேற்றத்தினை மறு ஆய்வு செய்வதோடு அதிகமாக கிராமங்களை நமக்கு நாமே திட்டத்தில் சேர்ப்பதற்கு ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 8. செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் ஆணையர், சென்னை மாநகராட்சி நமக்கு நாமே திட்டத்தின் கொள்கைகளையும் வெற்றிச் சாதனைகளையும் செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகள் மூலம் தமிழ் பத்திரிக்கை, மின்னனு சாதனங்கள் துண்டு பிரசுரங்கள் மூலம் விளம்பரம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 9. ஆவணங்கள் ஆக்குதல்

நமக்கு நாமே திட்டத்தைப் பற்றியும், மேற்படி திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் உள்ள நிலை பற்றியும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஆணையர், சென்னை மாநகராட்சி இத்திட்டத்தின் பல்வேறு நடவடிக்கைகள், செயலாக்கப்பட்ட விதம், இத்திட்டத்தினால் உள்ளூர் மக்களிடையே ஏற்பட்ட பாதிப்பு, நன்மைகள் ஆகியவற்றை ஆவணங்களில் பதிவு செய்து விவாத கூட்டங்கள் மூலமும், புகைப்படங்கள் மற்றும் வீடியோ மூலமும் விளம்பரம் செய்யலாம்.

### 10. அறிக்கை அனுப்புதல்

ஒவ்வொரு மாதமும் 5–ம் தேதிக்கு முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஆணையர், சென்னை மாநகராட்சி, பணிகளை ஆய்வு செய்து பணி முன்னேற்ற அறிக்கையினை ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு குறிப்பிட்ட படிவங்களில் அனுப்பி இதன் நகலினை அதாவது, நகர உள்ளாட்சி அமைப்புகள் பொறுத்தவரை நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர் ஆகியோருக்கும் அனுப்ப வேண்டும். வெற்றிச் சாதனைகள் புகைப்படங்களுடனும், விரிவான குறிப்புகளுடனும் ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலம் அரசுக்கு அனுப்பலாம். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மூன்று படிவங்களில் (இணைப்பு – iii, iv & v) ஊரக வளர்ச்சி இயக்குநர் அனைத்து மாவட்ட முன்னேற்ற அறிக்கைகளையும் தொகுத்து ஒவ்வொரு மாதமும் 10–ம் தேதிக்கு முன்னர் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஆணையர் சென்னை மாநகராட்சி இத்திட்டத்தினை நிறைவேற்றும் செயல்திறன் மிக்க அலுவலர்கள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் கொண்ட குழுவினருக்கு தலைவராக இருந்து ஒவ்வொரு பணியினையும் திட்டமிடுதல், உருவாக்குதல் மற்றும் நிறைவேற்றுதல் போன்ற ஒவ்வொரு நிலையிலும் முழுமையாக ஈடுபட்டு அதிகமான இடங்களில் முடிந்தவரை இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டும். அரசு சார்பற்ற நிறுவனங்கள், அறிவொளி இயக்கத் தொண்டர்கள் மற்றும் இந்தப் பணிகளுக்கு பொறுப்பாக்கப்பட்ட அலுவலர் குழுவினர் மூலம் உள்ளாட்சி அமைப்பு நிலையில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தி ஒவ்வொரு பணியினையும் நேரடியாக ஆய்வு செய்து தீவிரமாக கண்காணிக்க வேண்டும். இந்த திட்டத்தின் சாதனைகளை உள்ளூர் மக்களிடையே நல்ல முறையில் விளம்பரப்படுத்தி மாவட்டங்களில் நிறைவேற்றப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் பொதுமக்களின் தடையற்ற பங்கேற்பினை நமக்கு நாமே திட்டத்தின் மூலம் உறுதி செய்ய வேண்டும். விரைவாக சமூக பொருளாதார மாற்றம் கிராம மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் அதிக அளவில் ஏற்பட வேண்டுமானால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட அதிகாரிகள் நமக்கு நாமே திட்ட செயலாக்கத்தில் தலைமைப் பொறுப்பு ஏற்று நடத்தினால் தான் முடியும். நமக்கு நாமே திட்டத்தை நிறைவேற்றுவதில் சிறந்து பணியாற்றும் உள்ளாட்சி அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு அவர்களுடைய சிறந்த பணிக்கு ஊக்கப்படுத்தும் வகையில் சிறப்புப் பரிசுகள் வழங்கலாம். இத்தகைய பரிசுகள் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ஊரக வளர்ச்சித் துறைக்கு கருத்துரு அனுப்பலாம்.

**3. NNT**

இணைப்பு – II

அரசாணை (நிலை) எண்.77, ஊரக வளர்ச்சித்துறை (ஒஊவதி–1) துறை, நாள். 19.04.1999
ஊரக மற்றும் நகர்ப்புற மாவட்டங்களிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மற்றும் சென்னை மாநகராட்சிக்கும் நிதி ஒதுக்கீடு
(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | வட்டாரங்களுக்கு ஒதுக்கப்படும் தொகை | மாநகராட்சிகளுக்கு ஒதுக்கப்படும் தொகை | நகராட்சிகளுக்கு ஒதுக்கப்படும் தொகை | பேரூராட்சி களுக்கு ஒதுக்கப்படும் தொகை | மொத்த ஒதுக்கீடு தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 20.00 | | 6.50 | 4.62 | 31.12 |
| 2 | திருவள்ளூர் | 22.00 | | 6.75 | 3.38 | 32.13 |
| 3 | கடலூர் | 26.00 | | 4.75 | 2.65 | 33.40 |
| 4 | விழுப்புரம் | 20.00 | | 2.00 | 2.74 | 24.74 |
| 5 | வேலூர் | 30.00 | | 7.50 | 4.72 | 42.22 |
| 6 | திருவண்ணாமலை | 30.00 | | 3.50 | 1.51 | 35.01 |
| 7 | சேலம் | 25.00 | 20.00 | 2.75 | 5.54 | 53.29 |
| 8 | நாமக்கல் | 25.00 | | 4.00 | 3.36 | 32.36 |
| 9 | தர்மபுரி | 20.00 | | 2.75 | 2.95 | 25.70 |
| 10 | ஈரோடு | 26.00 | | 4.50 | 9.67 | 40.17 |
| 11 | கோயம்புத்தூர் | 38.00 | 20.00 | 5.50 | 9.45 | 64.95 |
| 12 | நீலகிரி | 8.00 | | 2.75 | 2.28 | 13.03 |
| 13 | தஞ்சாவூர் | 25.00 | | 4.25 | 3.52 | 32.77 |
| 14 | நாகப்பட்டிணம் | 22.00 | | 3.25 | 1.64 | 26.89 |
| 15 | திருவாரூர் | 20.00 | | 3.00 | 1.25 | 24.25 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 25.00 | 20.00 | 1.50 | 3.04 | 49.54 |
| 17 | கரூர் | 16.00 | | 2.25 | 2.11 | 20.36 |
| 18 | பெரம்பலூர் | 20.00 | | – | 1.28 | 21.28 |
| 19 | புதுக்கோட்டை | 26.00 | | 2.00 | 1.38 | 29.38 |
| 20 | மதுரை | 26.00 | 20.00 | 2.25 | 2.62 | 50.87 |
| 21 | தேனி | 16.00 | | 3.75 | 3.72 | 23.47 |
| 22 | திண்டுக்கல் | 23.00 | | 4.00 | 4.03 | 31.03 |
| 23 | இராமநாதபுரம் | 18.00 | | 1.50 | 1.35 | 20.85 |
| 24 | விருதுநகர் | 18.00 | | 6.00 | 1.49 | 25.49 |
| 25 | சிவகங்கை | 22.00 | | 2.75 | 1.94 | 26.69 |
| 26 | திருநெல்வேலி | 25.00 | 20.00 | 3.75 | 6.30 | 55.05 |
| 27 | தூத்துக்குடி | 21.00 | | 2.75 | 3.31 | 27.06 |
| 28 | கன்னியாகுமரி | 15.00 | | 3.75 | 8.15 | 26.90 |
| 29 | சென்னை மாநகராட்சி | – | 80.00 | – | – | 80.00 |
| | மொத்தம் | 620.00 | 180.00 | 100.00 | 100.00 | 1000.00 |

## இணைப்பு – III

## நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகள் ( அனைத்து திட்டங்களிலும்)

............... அன்று

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வட்டாரங்கள் / நகர உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை | நமக்கு நாமே திட்டப் பணிகள் எடுக்கப்பட்ட வட்டாரங்கள்/ நகர உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை | நமக்கு நாமே திட்டப் பணிகள் எடுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை | நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட வேலைகள் / நடவடிக்கைகளின் மொத்தம் | | | நிதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | எடுக்கப்பட்டது | தொடங்கப் பட்டது | முடிக்கப்பட்டது | முதலீடு | சாதனை |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | | | | | | | | | |

# இணைப்பு – IV

## நமக்கு நாமே திட்டட்தின் கீழ் ஒதுக்கப்பட்ட பணிகள்

### ............... அன்று

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | நமக்கு நாமே திட்ட மானியத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகள் | | | | | | | | ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்களின் கீழ் எடுக்கப்பட்ட பணிகள் | | | | | | | | மொத்தம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொதுமக்கள் பங்கேற்பு | | | | அரசு/ உள்ளாட்சி அமைப்பு மானியம் | மொத்தம் | எடுக்கப்பட்ட பணிகளின் மொத்த எண்ணிக்கை | முடிக்கப்பட்டது | பொதுமக்கள் பங்கேற்பு | | | | அரசு/ உள்ளாட்சி அமைப்பு மானியம் | மொத்தம் | எடுக்கப்பட்ட பணிகளின் மொத்த எண்ணிக்கை | முடிக்கப்பட்டது | பொதுமக்கள் பங்கேற்பு | | | | அரசு/ உள்ளாட்சி அமைப்பு மானியம் | மொத்தம் | எடுக்கப்பட்ட பணிகளின் மொத்த எண்ணிக்கை | முடிக்கப்பட்டது |
| | | பணம் | பொருள் | உடல் உழைப்பு | மொத்தம் | | | | | பணம் | பொருள் | உடல் உழைப்பு | மொத்தம் | | | | | பணம் | பொருள் | உடல் உழைப்பு | மொத்தம் | | | | |
| 1 | 2 | 3a | 3b | 3c | 3d | 4 | 5 | 6 | 7 | 8a | 8b | 8c | 8d | 9 | 10 | 11 | 12 | 13a | 13b | 13c | 13d | 14 | 15 | 16 | 17 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

## இணைப்பு – V

## நமக்கு நாமே திட்ட செயலாக்கத்தில் முன்னேற்றம் (100% பங்கேற்புடன் எடுக்கப்பட்ட வேலைகள் ) .......... அன்றுவரை

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | பொதுமக்களின் 100% பங்கேற்புடன் எடுக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை | | பொதுமக்களின் 100% பங்கேற்புடன் எடுக்கப்பட்ட வேலைகளில் தொடங்கப்பட்டவையின் எண்ணிக்கை | | பொதுமக்களின் 100% பங்கேற்புடன் எடுக்கப்பட்ட வேலைகளில் முடிக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வேலைகளின் எண்ணிக்கை | நிதி | வேலைகளின் எண்ணிக்கை | செலவு செய்யப்பட்ட நிதி ... அன்று | வேலைகளின் எண்ணிக்கை | செலவு செய்யப்பட்ட நிதி ... அன்று |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | | | | | | | |